மலேசிய நண்பன்

23 August 2020 (Sunday)

# மெட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவனம் 6,500 தேசியக் கொடிகளை வழங்கியது!



★ மாநகராட்சி மேயர் டத்தோ ஜஸாலி சலாவூடினிடம் நிர்வாக இயக்குநர் ஹோ காங் சூன் மலேசியக் கொடிகளை வழங்குவதைக் காணலாம்

(துர்க்கா)

சிரம்பான், ஆக. 23-

நெகிரி செம்பிலான் மாநிலத்தில் பிரபல மேம்பாட்டு நிறுவனமும், பங்கு சந்தையில் இருக்கும் மெட்ரிக்ஸ் நிறுவனம் தேசிய தினத்தை முன்னிட்டு 6,500 தேசியக் கொடியை வழங்கியது.

நேற்று முன்தினம்-சிரம்பான் மாநகராட்சி மேயர் டத்தோ ஜஸாலி சலாவூடினிடம் மெட்ரிக்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் ஹோ காங் சூன் மலேசியக் கொடிக்களை ஒப்படைத்தார்.

2020 தேசிய தின மாதத்தை முன்னிட்டு சிரம்பான், நகர் முழுவதும் வடிவமைத்து அலங்கரிக்க இந்த மலேசியக் கொடிகள் பயன்படுத்தப்படும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

சிரம்பான் மக்களிடையே சுதந்திர உணர்வை ஊக்குவிக்கும் முயற்சியில் மெட்ரிக்ஸ் நிறுவனம் சமூக அடிப்படையில் இந்த மலேசியக் கொடிகளை வழங்கும் திட்டத்தை மேற்கொண்டு வருவதாக நிர்வாக இயக்குநர் ஹோ காங் சூன் விளக்கினார்.

மலேசியாவில் பெரு நிறுவன குடிமக்கள் என்ற வகையில், இந்த ஆண்டு தேசிய மாதத்தை தேச பக்தியுடன் கொண்டாடுவதற்காக நெகிரி செம்பிலான், பண்டார் ஸ்ரீ செண்டாயான் மற்றும் ஜொகூர், குளுவாங் பண்டார் ஸ்ரீ இம்பியான் ஆகிய இடங்களில் இத்திட்டத்தின் மூலம் கொடிகள் வழங்குவதில் பெருமிதம் கொள்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

2020 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை ஆகஸ்ட் 31 அன்று முடிவில்லாத கோவிட்-19 தொற்று காரணமாக புதிய விதிமுறைகளுடன் கொண்டாடுவோம் என்றாலும் தேசபக்தி உணர்வு எப்போதும் ஒவ்வொரு மலேசியரிடமும் இருக்க வேண்டும் என்றார் அவர்.